# அவசரகால நிலைப் பிரகடனம் தொடர்பில் சிவில் சமூகத்தின் நிலைப்பாடு

சிவில் சமூகப் பிரசைகள் மற்றும் உறுப்பினர்கள் என்ற ரீதியில் கீழே ஒப்பமிட்டுள்ள நாங்கள் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் இலங்கையில் அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்துவதற்கான ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் எமது தீவிர கரிசணையினை வெளிப்படுத்துவதற்காக இதனை எழுதுகின்றோம்.

கொவிட் - 19 பெருந்தொற்றுச் சூழலில் இலங்கையில் நிலவும் சுகாதார அவசரநிலையினைக் கருத்தில் கொண்டு சமுதாய வாழ்விற்கு அவசியமான விநியோகங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் பொதுமக்கள் பாதுகாப்பினையும் நலனோம்புகையினையும் உறுதிப்படுத்துதல் என்ற போர்வையில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பதுக்கிவைத்தல், கொள்ளை லாபமீட்டல் மற்றும் பொருட்களின் நியாயமற்ற விநியோகம் என்பவற்றினைத் தான் நிறுத்த எண்ணியுள்ளதாக ஜனாதிபதி தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். பிரதான உணவுப் பொருட்களின் விலை துரிதமாக அதிகரித்துவருகின்ற காரணத்தினால் பொதுமக்களால் அப்பொருட்களை விலை கொடுத்து வாங்க முடியாதுள்ளது என்பதை ஜனாதிபதி ஏற்க மறுத்துவருகின்றார். மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பாக முதலில் எடுக்கப்பட்ட திட்டமிடப்படாத தீர்மானங்களும் அதன் பின்னர் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவது தொடர்பான தீர்மானங்களும் இந்த நிலைக்குக் காரணமாகியுள்ளன. குறைந்து வரும் வெளிநாட்டு நாணய ஒதுக்கங்களினால் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடு காரணமாக உணவு இறக்குமதி தடைப்பட்டு உணவுப் பற்றாக்குறை ஏற்படப்போகும் நிலையில் இலங்கை உணவுப் பாதுகாப்புத் தொடர்பான சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது என்ற உண்மையினையும் நாம் மறுக்க முடியாது. இது பரந்த அளவுக்குக் கலந்துரையாடப்பட்டு எதிர்பார்க்கப்பட்டது.

பெருந்தொற்றுடன் தொடர்புறாத நிதி நெருக்கடி நிலைமைக்கும் இலங்கை முகங்கொடுக்கின்றது. பல தசாப்தங்களாக அரசாங்கங்கள் வளங்களை ஊதாரித்தனமாகச் செலவழித்த காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் பெருந்தொற்றின் போது மிகத் தீவிரமாகப் பணம் அச்சடிக்கப்பட்ட காரணத்தினால் அமெரிக்க டொலருக்குச் சமாந்தரமாக ரூபாவின் பெறுமதி இறக்கமடைந்துள்ளது. உணவுப் பொருட்களின் விலை எக்கச்சக்கமாக எகிறியுள்ளது. முறைசார் வங்கிச் சேவைத் துறையில் வெளிநாட்டு நாணய ஒதுக்கங்கள் குறைவடைந்துள்ளமை மற்றும் அதிகரித்துவரும் வெளிநாட்டு நாணயக் கறுப்புச் சந்தை ஆகியவை இறக்குமதியாளர்களின் மத்தியிலும் ஏற்றுமதியாளர்களின் மத்தியிலும் வியாபாரிகளின் மத்தியிலும் அச்சத்தினை உருவாக்கியுள்ளது.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ள மனம்போன போக்கிலான பல கொள்கைகளால் செயற்கையான பற்றாக்குறையும் விலை அதிகரிப்பும் உருவாகியுள்ள ஒரு சூழமைவில் உணவு இறக்குமதி மற்றும் விற்பனை

என்பவை மீளாய்வு செய்யப்படவேண்டும். இவ்வாறான கொள்கைகளில் மிகவும் துலாம்பரமானவையாக மஞ்சள், உளுந்து (தமிழ்ச் சமுதாயத்தின் முக்கியமான உணவு), இரசாயன உரம் ஆகியவற்றின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட திடீர்த் தடையும் சீனி மற்றும் வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரிகள் திடீரெனக் குறைக்கப்பட்டு மீண்டும் அதிகரிக்கப்பட்டவையும் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வாறான நடவடிக்கைகள் மிக நெருக்கமான நட்பு வட்டத்தில் இருக்கும் முதல்வாதச் சதிக் குழுக்களுக்கு நன்மையளித்துள்ளதாகவே பரவலாகப் புரிந்துகொள்ளப்படுகின்றது.

இந்தச் சூழமைவில், அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்துவது என்ற ஜனாதிபதியின் தீர்மானமும் குறிப்பாக 2021 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2243/3 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (அத்தியாவசிய உணவு ஏற்பாடு) ஒழுங்குவிதியும் சந்தேகத்துடன் நோக்கப்படுகின்றன. அவசரகால நிலைப் பிரகடனம் உணவு விநியோகத்தினை ஸ்திரப்படுத்துவதில் கவனம் குவிப்பது போல் தோன்றினாலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே பரிசீலிப்புக்களும் சமப்படுத்தல்களும் கொண்ட பரந்த அதிகாரத்தினை அவசரகால நிலைப் பிரகடனம் ஜனாதிபதிக்கு வழங்குகின்றது.

2021 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டதுடன் **எந்த விடயம்** தொடர்பான அவசரகால ஒழுங்குவிதிகளையும் **எந்த நேரத்திலும்** பிரகடனப்படுத்த ஜனாதிபதியினால் இப்போது முடியும்.
அவசரகாலச் சட்டத்துடனும் ஏனைய பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களுடனும் இலங்கை கொண்டுள்ள நீண்ட வரலாறு காரணமாகவும் இவை உருவாக்கிய அடக்குமுறையின் ஆழப்பதிந்த பண்பு காரணமாகவும் அவசரகாலச் சட்டத்தின் இப்பிரகடனம் பாரதூரமான கரிசணைகளை எழுப்புகின்றது.

பெருந்தொற்றின் போது செயற்திறன்மிக்க தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு அதிவிசேட அதிகாரங்கள் வழியே ஜனாதிபதிக்கு வேறு என்ன தேவைப்படுகின்றது? 6.9 மில்லியன் வாக்குகளைப் பெற்று பொதுமக்களின் உறுதியான நம்பிக்கைப் பிரேரணையுடன் 2019 நவம்பர் 16 ஆம் திகதி ஜனாதிபதி பதவியேற்றார். பாராளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு 145 உறுப்பினர்களின் ஆதரவு வழங்கப்பட்டது. இவற்றையெல்லாம் தாண்டி, பெருந்தொற்றின் பிடியில் நாடு சிக்குண்டிருந்த நிலையில், ஜனாதிபதிக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கவும் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கான அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பினை அகற்றவும் 20 வது அரசியலமைப்புத் திருத்தத்தினை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதியும் பாராளுமன்றமும் அதீத அரசியல் சக்தியினை முதலீடு செய்தன. இந்த அதிகாரங்களுடன், எதிர்க்கட்சியுடன் இருதரப்புக் கருத்தொருமிப்பினைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பினைப் புறந்தள்ளி ஜனாதிபதி முக்கியமான நியமனங்களை மேற்கொள்வதைத் தொடர்ந்தார். அரசாங்க சேவையின் சிரேஷ்ட பதவிகள் ஆயுதப் படைகளின் ஓய்வுபெற்ற அதிகாரிகளைக் கொண்டு நிரப்பப்பட்டன.

மருத்துவத் துறையினையும் பொதுநிர்வாகத்தினையும் சேர்ந்த பிரதான தொழில்வல்லுனர்கள் ஓரங்கட்டப்பட்டு கொவிட் – 19 செயலணியில் இராணுவ ஆளணியினரே ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். இதனால் மருத்துவத் துறையினரும் பொதுநிர்வாக அதிகாரிகளும் கொள்கை வகுப்பவர்களாகவும் தீர்மானம் வகுப்பவர்களாகவும இருப்பதை விடுத்து வெறுமனே அமுல்படுத்துனர்களாகச் சேவையாற்றி வருகின்றனர்.

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் தொற்றுநோய்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஏற்பாடுகள் குறிப்பாகத் தொற்றுநோய்களுக்கான ஏற்பாடுகளை வழங்குகின்ற போதிலும் அவை அனர்த்தம் என்ற நோக்கெல்லையினுள் வருகின்ற காரணத்தினால் அரசாங்கம் இச்சட்டத்தினைப் பயன்படுத்து மறுத்துவிட்டது. இவ்வாறான அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்து தணிப்பதற்காகத் திட்டமிடுகின்ற உள்ளடக்கும்தன்மை மிக்க சபை ஒன்றினை உருவாக்குவதற்காக அரசாங்கத்தின் பல கிளைகளையும் ஒன்றுசேர்ப்பதற்கான ஏற்பாடுகளை இச்சட்டம் வழங்குகின்றது. எவ்வாறாயினும், அரசாங்கத்தின் பெருவிருப்புக்குரிய அணுகுமுறையாக இருப்பது அத்தியாவசிய விநியோகங்களை முகாமைத்துவம் செய்வதற்கு இராணுவமயப்படுத்தப்பட்ட பதிற்செயற்பாடாகும்.

உணவுப் பாதுகாப்பினை ஜனாதிபதி இப்போது இராணுவத்தின் கரங்களில் ஒப்படைத்திருக்கின்றார். தற்போது, அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட விசேட உணவுப் பொதித் திரளினை விநியோகிப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. தகைமை வாய்ந்த அதிகாரசபை நெல், அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மாத்திரம் கைப்பற்றாது பொதுமக்களுக்கு அவசியமான விநியோகங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கென அவ்வாறான பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களையும் கைப்பற்றலாம். இது பரந்ததும் கட்டற்றதுமான அதிகாரமாகும். யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவில் உணவு உற்பத்தியில் இராணுவம் வகித்த வகிபாத்திரமும் அவ்வுற்பத்திகளை இராணுவக் கட்டுப்பாட்டு மார்க்கங்கள் மூலம் விநியோகித்தமையும் உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளைக் கீழறுத்தமைக்காக ஏற்கனவே கண்டனங்களைப் பெற்ற விடயங்களே.

பதுக்கலைத் தடுப்பதும் விநியோகத்தினை வசதிப்படுத்துவதுமே ஒழுங்குவிதிகளின் நோக்கம் எனக் கூறப்பட்ட போதிலும், இவ்வாறான நடவடிக்கைகளின் செயன்முறை மற்றும் பாலாபலன்கள் பற்றிப் பொதுமக்கள் அறியாமல் உள்ளனர். கைப்பற்றப்படும் இருப்புக்களுக்கு என்ன நடக்கின்றது? களஞ்சியங்கள் முற்றுகையிடப்படுகையில் என்ன நடக்கும் என்பதைப் பொதுமக்கள் எவ்வாறு அறிந்துகொள்வர்? கைப்பற்றப்பட்ட அனைத்து விநியோகங்களும் சதொசவிற்கு வழங்கப்படுமா? இவ்வாறான நடவடிக்கைகள் பற்றிய பகிரங்கமாக அணுகக்கூடிய பதிவு இருக்குமா? பதுக்கல்காரர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் என்ன? குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் கொண்டு வருவதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுமா?

ஒழுங்குவிதிகளை உன்னிப்பாக அவதானிக்கையில், உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்து அவற்றினைப் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கு மாத்திரம் அவற்றின் நோக்கம் வரையறுக்கப்பட்டதாகத் தென்படவில்லை. 'அத்தியாவசிய சேவைகளின்' முகாமைத்துவத்திற்கும் ஒழுங்குவிதிகள் பிரயோகிக்கத்தக்கவையாகும். வேலை நிறுத்தங்கள் முதல் ஆர்ப்பாட்டம் வரையான "அத்தியாவசிய சேவைகளுக்கான" எவ்விதமான புலனுணரப்பட்ட இடையூறுகளும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தினை மீறியவையாகவே கையாளப்படும்.

பொது நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களும் இராணுவத்தினால் தான் முகாமைத்துவம் செய்யப்பட முடியும் மற்றும் இராணுவத்தினால் தான் முகாமைத்துவம் செய்யப்படவேண்டும் என்கின்ற கருத்தினை சிவில் சமூகக் கூட்டு என்கின்ற ரீதியில் நாம் எதிர்க்கின்றோம், அத்துடன் அதனைக் கண்டிக்கின்றோம். இந்த மனப்பாங்குகளும் அணுகுமுறைகளும் அரச சேவையின் ஒழுங்குணர்வினை உருக்குலைத்துள்ளதுடன் அரச சேவையின் மிகுந்த திறன்படைத்த தொழில்வல்லுனர்களையும் அதில் இருந்து அகற்றியுள்ளது. இது பிரசைகளை மௌனிக்கச் செய்கின்ற கட்டளை – கட்டுப்பாடு எனும் கலாசாரத்தினை வலுப்படுத்தியிருக்கின்றது. இது இலங்கையின் ஜனநாயத்திற்கு நல்ல சகுனமல்ல. உண்மையில் இது எமது நாட்டினை சர்வாதிகார ஆளுகைக்கு இட்டுச்செல்லும் என்பதுடன் பாராளுமன்ற இறைமை மற்றும் ஜனநாயக வகைப்பொறுப்பு ஆகியவை சீரழிந்துபோவதற்கும் இட்டுச்செல்லும்.

இலங்கை பல தசாப்தங்களாக அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் ஆளப்பட்டு அதனால் பல சட்டங்கள் உரிய பரிசீலனையும் விவாதமுமின்றிப் பாராளுமன்றத்தின் மூலம் தோற்கடிக்கப்பட்ட நிலை உருவானது என்பதை நாம் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் நினைவூட்ட விரும்புகின்றோம். பாதிக்கப்பட்டுள்ள வாழ்வின் பல அம்சங்களை முகாமைத்துவம் செய்வதற்கான அதிகாரங்கள் எவையும் ஜனாதிபதியிடம் தாமே இல்லாமல் இல்லை. அதிகாரங்கள் குவிக்கப்படுவது பொறுப்புக்கள் குவிக்கப்படுவதைக் குறிக்கவேண்டும் என்பதுடன், பெருந்தொற்றுக்கான இலங்கையின் பதிற்செயற்பாடு ஏன் தாறுமாறாகிவிட்டது, எமது தொற்றுக்கள் மற்றும் மரண வீதங்கள் ஏன் அதிகரித்துவருகின்றன, மக்கள் ஏன் உணவும் அவசியமான சுகாதாரப் பராமரிப்பும் அடிப்படை வசதிகளும் இன்றி அநாதரவாக்கப்பட்டுவிட்டனர் என்பதற்கான காரணங்களை இறுதியில் ஜனாதிபதியும் அவர் நியமித்தவர்களுமே பொதுமக்களுக்கு விளக்கவேண்டும்!

Endorsing

Organizations

1. Rural Development Foundation
2. Law and Society Trust
3. Women Development Innovators
4. Centre for Human Rights and Development
5. Mannar Women's Development Federation
6. Women's Action Network
7. Alliance for Minorities
8. Rule of Law Forum
9. Family Rehabilitation Center
10. International Center for Ethnic Studies
11. Dabindu Collective
12. Anuradhapura District Citizen Committee
13. Rights Now Collective for Democracy
14. SAVISTHRI National Women Movement
15. Women Action for Social Justice
16. Women Centre
17. Mannar Social and Economical Development Organization -(MSEDO)
18. Centre for Equality and Justice
19. The Forum for a Plural Democracy
20. The Women and Media Collective
21. Gender, Social Capital, and Rural Community Development
22. Right to Life
23. The Centre for Society and Religion (CSR)
24. Janawaboda Kendraya
25. Prabathaya Art and Media organization
26. Movement for Land and Agriculture Reforms (MONLAR)
27. People's Alliance for Right to Land (PARL)
28. Women's Action for Social Justice(WASJ)
29. Ceylon Mercantile Industrial & General Workers Union (**CMU**)
30. Muslim Women's Development Trust
31. FIAN Sri Lanka
32. Federation of Media Employees Trade Union
33. RED Organization
34. Uva Shakthi Foundation
35. Suriya Women's Development Centre

Individuals

1. Ranitha Gnanarajah AAL
2. Shreen Abdul Saroor
3. Sarala Emmanuel
4. Nalini Ratnarajah
5. Lahiru Perera
6. Jehan Jegatheesan

7. Ambika Satkunanathan
8. Dr. Tush Wickramanayake
9. Dr. Sakuntala Kadirgamar
10. P.N.Singham
11. Mario Gomez
12. Nishan Fonseka
13. Chulani Kodikara
14. Bhavani Fonseka
15. Ruki Fernando
16. Dulan Disanayake
17. Perameswaran Thuwaraha
18. Nimalka Fernando
19. B. Gowthaman
20. Roshini D. Weerasinghe
21. Mirak Raheem
22. Nimal Dissanayake
23. Jayanthi Kuru-Utumpala
24. Probhoda Rathnayake
25. Anuratha Rajaretnam
26. Abdul Raheems
27. Ameer Faaiz
28. A. Dorin Rajani
29. Ranitha Gnanarajah
30. Padma Pushpakanthi
31. Inoma Karunatilake
32. Yartan Figurado
33. Melani Manel Perera - Journalist
34. Sr.Deepa Fernando - HF Sister
35. Sr. Sharmani Fernando - HF Sister
36. Sriyanthi Perera - HF Associate
37. Rita Fernando - HF Associate
38. Theresa Rajapaksa - HF Associate
39. Shivanthi Fernando - HF Associate
40. Shirani Cooray
41. P.Muthulingam
42. Marisa de Silva
43. Shyamala Gomez
44. Anthony Jesudasan
45. S.C.C.Elankovan
46. Ashila Dandeniya
47. Nishadi Somaratne
48. Visakha Tillekeratne
49. Philip Disanayake
50. Thiyagaraja Waradas
51. Thilak Kariyawasam
52. Anushaya Collure
53. Sr. Rasika Pieris - HF Sister
54. Nimal Perera
55. Renuka Fernando